RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணனின் பெண்ணியப் பார்வை

ஜெ. தமிமுல் அன்சாரி [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, புதுக்கல்லூரி (தன்னாட்சி), சென்னை - 600014, இந்தியா

# Rajam Krishnan’s Feminist Perspective

J. Thameemul Ansari [a, *]

[a] Department of Tamil, The New College (Autonomous), Chennai – 600014, India

* Corresponding Author: jthameemulansari@thenewcollege.edu.in

Received: 10-11-2025
Revised: 24-02-2026
Accepted: 07-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

In the Tamil literary tradition, women’s lived experiences, marked by social oppression, denial of rights, and structural inequalities have been articulated across different historical periods. Among modern Tamil writers, Rajam Krishnan stands out for presenting these issues with a deep and critical social consciousness. Her novels portray women’s family responsibilities, the psychological pain of motherhood, female subjugation, lack of education, and economic dependency with striking realism. This paper examines Rajam Krishnan’s feminist perspective through an analysis of the novels Marimarippinnum and Suzhalil Mithakkum Deepangal. It explores how the physical, psychological, and social burdens experienced by women within the family structure are reflected in literary form. Further, the study highlights education as a crucial force in transforming women’s economic independence, personal freedom, and social environment. Ultimately, Rajam Krishnan’s feminist vision, which advocates women’s liberation and equality through literature, emerges as an important intellectual foundation for social change.

**Keywords:** Feminism, Rajam Krishnan, Women’s Oppression, Female Education, Women’s Liberation.

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் முதற்கொண்டு இக்கால இலக்கியங்கள் வரையிலும் பெண்மையைப் பேசாத இலக்கியங்களே இல்லை. பெண்கள் இச்சமூகத்தில் ஒடுக்கப்படுபவர்களாகவும், வாழ்வில் பல வலிகள் நிறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர், இந்த அவலநிலை ராஜம் கிருஷ்ணன் அவர்களின் எழுத்துகளில் இழையோடுகின்றன. அவற்றை ஆய்வதே இக்கட்டுரையின் பொருண்மையாக அமைகின்றது.

## பெண்ணியம்

பெண்ணியம் என்பது அரசியல், பொருளாதார, சமூகப் பாகுபாடுகளுக்கு எதிராக வலுக்கும் குரலாகும். இதன் முக்கிய நோக்கமே ஆண், பெண் என்ற இவ்விரு வர்க்கத்திற்கும் சமத்துவத்தைப் போதிப்பதாகும்.

"அடக்குமுறை எங்கெல்லாம் நிலவுகின்றதோ அங்கெல்லாம் விடுதலை பேச வேண்டிய அவசியமுள்ளது. உலக அரங்கில் முதலாளி தொழிலாளிக்கு இடையே நிலவும் உயர்வு தாழ்வை உடைத்த மார்க்சிய சித்தாந்தத்தின் அடிப்படையில் பெண்மீதான அடக்குமுறை சார்ந்த விவாதமும் கண்ணோட்டமும், பெண்ணியத்தின் கூறுகளைப் புரிந்துகொள்ள உதவுகிறது. பெண் விடுதலையைக் குறிக்கின்ற பெண்ணியத்தின் கருத்தாக்கங்கள் திறனாய்வுக்குட்படும் போது ஆண் சமூகச் சட்டங்களால் உருவாக்கப்பட்ட கருத்தியல்களும் செயல்களும் ஆண் சார்பானவை, இவற்றை எதிர்க்கும் ஒரு செயல்,

அல்லது பேசுதல், அல்லது கருத்தை நிறுவுதல் ஆகியவை பெண்ணியம் எனப்படும்." (அரங்க மல்லிகா, பெண்ணின் வெளியும் இருப்பும், ப, 11)

என்னும் வரிகளில் அரங்கமல்லிகா அவர்கள் பெண்ணியம் குறித்த தனது கருத்தைக் குறிப்பிடுகிறார்.

## தாய்மை உணர்வு

இராஜம் கிருஷ்ணன் அவர்கள் தன்னுடைய 'மாறிமாறிப்பின்னும்' என்னும் புதினத்தில் வரும் 'ரேவு' தன் மகன் பரத் பற்றி கவலை கொள்கிறாள். தாயின் அரவணைப்பும், அன்பும் கிடைத்தால்தான் குழந்தையின் அறிவு வளர்ச்சியும், மனிதநேயமும் மிகுந்து காணப்படும். இதனை உணர்ந்த ரேவு தன் தம்பி வீட்டிற்கு சென்றிருந்தபோதும் பரத்தின் மீது அக்கறை கொண்டு வீட்டிற்கு மீண்டும் வருகிறாள். பரத் குடித்து விட்டு மாடியில் மயங்கிய நிலையில் படுத்திருப்பதைப் பார்த்து அச்சமடைகிறாள். மருத்துவர் அவனைப் பரிசோதித்து, இவன் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கிறான். இதிலிருந்து இவனை விடுவிக்க வேண்டும் என்று கூறுகிறார்.

"இந்த பரத்தைப் பெற ஒரு வாரம் சிரமப்பட்டாள். ஈசுவரா, இப்படியே நான் சாகக் கூடாதா என்று அப்போது விம்மி அழுதாள். ஒரு பெண்ணுக்குத் தாய்மையின் தலையாய நோவும், தாயின் இதத்தில் பொறுத்துக் கொள்ளும் மனவலிமையில் கரைந்து போகுமாம். ஈசுவரன் செட்டிப் பெண்ணுக்குத் தாயாக வந்தாராம். தரும ஆஸ்பத்திரி கோஷா ஆஸ்பத்திரியில் சிவப்பு ரவிக்கை போட்ட ஒரு மலையாள ஆயா.... நெற்றியில் பளிச்சென்று சிவப்புப் பொட்டுடன் இவளுக்கு மருத்துவம் செய்யப்பட்ட அறையில் எவ்வளவு இதமாகப் பேசினாள்! இவள் தான் ஈசுவரனோ என்று நினைத்தாள். ஆயுதம் போட்டுக் குழந்தையை எடுத்த அந்த டாக்டர்... எல்லாம் நினைவில் வந்து முட்டுகின்றன." (ராஜம் கிருஷ்ணன், மாறிமாறிப்பின்னும், ப.111)எனக் கூறுவதன் மூலம் ஒரு தாயின் மனப்பாங்கினை அறியமுடிகிறது.

தாயின் மனதைப் பிள்ளைகள் குளிர்விக்க வேண்டும். அவர்களுக்குப் பிள்ளைகள் நற்பெயர் பெற்றுத் தர வேண்டும் அஃது அவர்களுக்கு பேருவகையும் இன்பமும் அளிக்கும் என்பதை வள்ளுவரும்,

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்" (குறள் - 69)

என்று சுட்டுகிறார். நல்ல மகனைப் பெற்றெடுத்தவள் என்று ஊரார் பாராட்டும் பொழுது அவனைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியைவிட அதிக மகிழ்ச்சியை அந்தத் தாய் அடைவாள்.

## குடும்பப் பொறுப்பு

அதி காலையில் எழுந்து தண்ணீர்த் தெளித்து, கோலமிட்டு, பாத்திரம் கழுவி, குழந்தைக்கும் கணவனுக்கும் உணவு சமைத்து குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி, கணவனை வேலைக்கு அனுப்பி, துணி துவைத்து மதிய உணவு சமைத்து பள்ளியிலிருந்து பிள்ளைகளை அழைத்து வந்து, அவர்களுக்கு உணவு கொடுத்து, இப்படி பெண்ணானவள் எந்தவித சோர்வும் கொள்ளாமல் தன் அன்றாட வேலைகளை நிறைவு செய்கிறாள். இருப்பினும் அவளின் பெரும்பொழுது அடுப்படியாகவே அமைகின்றது.

'மாறிமாறிப்பின்னும்' புதினத்தில் வரும் கதைமாந்தர் ரேவு என்கிற ரேவதியை ராஜம்கிருஷ்ணன் அறிமுகப்படுத்தி பெண்களின் இல்லற வாழ்வின் சுமைகளைச் சமூகத்திற்கு வெளிச்சமிட்டு காட்டுகிறார். சமையலறையிலே அவள் உறைந்து போகிறாள். என்பதற்கு,

"அடுப்படியை நன்றாகத் துடைத்து, ஒழிந்த பாத்திரங்களை ரேவு, தொட்டி முற்றத்தில் போடுகிறாள். கணவனும் இரண்டு பையன்களும் சாப்பிட்ட எச்சிற் தட்டுகள் குழம்புக் கற்சட்டி, மாவு கரைத்த பாத்திரம், இன்னும் தொட்டுத் தொடாத தம்பளர், கிண்ணம் என்று எல்லாவற்றையும் சுத்தம் செய்கிறாள். மணி பத்தடித்து விட்டது. காலையில் நாலரை மணிக்கு எழுந்ததிலிருந்து பத்தடிக்கும் வரையிலும் மூச்சு விட முடியாது." (ராஜம்கிருஷ்ணன், மாறிமாறிப்பின்னும், ப.9) எனும் வரிகளில் பெண்களின் துயர் விளக்கிக் காட்டப்படுகிறது.

## பெண்ணடிமை

படிப்பறிவு இல்லாத ரேவு தன் கணவனால் அடிமைப்படுத்தப்பட்டு வாழும் வாழ்க்கையைக் கண்ட சுதா அவளுக்கு அறிவுரைப் பகர்கிறாள். ஒரு பெண்ணின் சமூக வாழ்வை, தகுதியை அவளது பொருளாதாரமே நிர்ணயிக்கிறது. சுதா படித்து அலுவலகத்தில் பணியாற்றுகின்ற பெண். அவள் மீது கணவன் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தான். சுதந்திரமாகச் செயல்படக்கூடிய திறனுடையவளாகத் திகழ்ந்தாள். இதனால் ரேவு தன் குடும்பத்தில் நடக்கும் இடையூறுகளைச் சுதாவிடம் கூறி ஆறுதல் அடைகிறாள். ரேவுக்குக் கணவனிடம் நிகழும் அவலநிலையைக் கண்டு, துணையாக இருந்து அவளுக்கு உதவி செய்கிறாள் சுதா. சுதாவின் அறிவுச் சார்ந்த நிலைக்குக் காரணம் அவள் கற்ற கல்வியே ஆகும். சுதாவைப் பார்த்த ரேவுக்கு, தானும் படிக்க வேண்டும். தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உருவாகிறது. இதனை,

"இந்தக் கௌரவ நிலையைப் பற்றி எப்படி இவனுக்குப் புரியவைக்க? இல்லைடா வேம்பு, நான் எப்படியானும் படிச்சி ஒரு எஸ்.எஸ்.எல்.சி முடிச்சிருக்கணும். ஏதானும் வேலைக்குப் போய், என்னால் என்னைக் காப்பாற்றிக்க முடியும்னு ஆயிருக்கணும். கல்யாணம்னு என்னை இப்படி அடிமைச் சாசனம் பண்ணிக் கொடுக்க வேண்டாம்.... கல்யாணம் பண்ணிண்டாலும், அப்ப புருஷன் மதிப்பான். இப்ப சுதாவைப் பாரு, எவ்வளவு ஃபிரீயா இருக்கா? அவ புருஷன் அவளை எப்படி மதிக்கிறார், தாங்கறார்? அவர் பழகற விதமே மரியாதையாக இருக்கு. அவள் பகல் வேலை, ராவேலைன்னு போறா. அவரும் பாங்க் ஆடிட்டிங்தானே, பாதி நாள் போவார். ரெண்டு பேருக்கும் கர்வம் கிடையாது. அவாளும் எங்கோ வீடு கட்டிண்டு இருக்கா காலி பண்ணிட்டா, வேற யார் வருவாளோ!.... (ராஜம்கிருஷ்ணன், மாறிமாறிப்பின்னும், ப.39) எனும் வரிகளில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

## பெண்கல்வி

பெண் கல்வியின் அவசியத்தைப் பாரதிதாசனும்,

"பெண்கட்குக் கல்வி வேண்டும்

குடித்தனம் பேணுதற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்

மக்களைப் பேணுதற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்

உலகினைப் பேணுதற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்

கல்வியைப் பேணுதற்கே! " (குடும்பவிளக்கு 'விருந்தோம்பல்)

என்று குறிப்பிடுகிறார்.

பெண்கள் கல்வி பெற்றதால்தான், சமையல் அறையில் முடங்கிக் கிடந்த பெண்கள் பல சாதனைகளைப் புரிந்துள்ளனர். இன்று உலகின் பல்வேறு துறைகளில் பெண்கள் தங்கள் கடமைகளை, சிறப்பாக ஆற்றி வருகின்றனர். விளையாட்டுத்துறை முதல் விண்வெளி ஆராய்ச்சித்துறை வரை சாதனைகள் பல புரிந்துள்ளனர். ஒரு குறிப்பிட்ட வயது வரைதான் பெண்கள் கல்வி கற்க முடியும் அதற்கு மேல் அவர்கள் ஏதோ ஒரு காரணத்தால் முடக்கப்படுகிறார்கள் என்பதை,

"ஒன்பதாவதுக்கு மேல் எட்டிப் பார்க்க முடியாத ஒரு அதிர்ஷடம் கெட்ட பெண்... பதிமூன்று வயசுக்குள் எட்டு முடித்து ஒன்பதுக்கு வந்து என்ன பயன்? குடும்ப மானத்தைக் காப்பாற்ற மல்லிநாதன் என்ற ஒரு பத்தொன்பது வயசுக்காரனுக்கு அடிமையாக வேண்டி இருந்தது" (ராஜம் கிருஷ்ணன், சுழலில் மிதக்கும் தீபங்கள், ப.14) என்ற வரிகளின் மூலம் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டு, உலகத்தை அறியும் மனப்பக்குவம் கிடைக்கும் முன்பே திருமணம் செய்யப்பட்ட அவல நிலை சுட்டிக்காட்டப்படுகிறது.

## முடிவுரை

பெண்கள் கல்வி, பொருளாதாரம், அரசியல் மற்றும் அறிவியல் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் சாதிக்கக்கூடியவர்கள். அவர்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட்டால் மட்டுமே சமூக

முன்னேற்றம் ஏற்படும். இராஜம் கிருஷ்ணனின் பெண்ணியக் கண்ணோட்டம் சமூக மாற்றத்திற்கான வலுவான அடித்தளமாக அமைகிறது.

## References

Rajam Krishnan (1996), Marimaarippinnum (Noval), Thagam Pathippagam, Chennai, India.

Rajam Krishnan (1987) Suzhalil Mithakkum Deepangal (Noval), Thagam Pathippagam, Chennai, India.

Aranga Mallika (2008) Pennin Veliyum Irupum, Chennai, India.

Bharathidasan (1994), Kudumbavilakku, Manivasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License